# ஸ்ரீமத் விராட் விஸ்வப்பிரம்மணே நம:

## முன்னுரை

இந்த பகுதி "விஸ்வகர்மப் பிராம்மண வம்சப் பிரகாசிகை" என்ற தலைபில் 1950-ஆம் வருடம் திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களாலும், அதன் இரண்டாம் பதிப்பு 2004-ஆம் ஆண்டு திரு. பொன்னுசாமி ஆச்சாரியார் அவர்களாலும் வெளியிடப்பட்ட நூலில் இருந்து எடுக்கப்பட்டது. இந்த இரு நூலாசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெறிவித்துக்கொள்கிறேன்.

**நன்றி**

திரு. T.M.தெய்வசிகாமணி ஆச்சாரியார்.F.R.S.A(லண்டன்)

**நன்றி**

திரு. S.பொன்னுசாமி ஆச்சாரியார்
குடியாத்தம்.

இவன்

இரா. விநாயகமூர்த்தி ஆச்சாரி. M.E
காஞ்சீபுரம்

# விஸ்வகர்ம பிராம்மண வேதாதிகார விளக்கம்

ஸ்காந்தம் நாகரகாண்டம்-13 ம் அத்தியாயம்:
"தேவதேவ மஹாதேவ ஸர்வக்ஞஜகதாம்பதே"

எனத் தொடங்கிப் பின் 11 ம் சுலோகம் முதலாக வரும் கீழ்கண்ட சுலோகங்களை ஆராய்வோம்.

17. தம் நஸ்மரேன் நஸ்ப்ருசே-ச்-சதஸ்ப் ருஷ்ட்டாம்
ஜா தம்பஞ்சப் ரஹ்மகுலம்-ஸ்ந்தாதௌ விஸ்வகர்மண :

18. நித்யகர் மாஷ்டகயுதம்-கர்மசோடச நிஷ்டிதம்
மனுர் மயஸ்ததா த்வஷ்ட்டா-சில்பீவிஸ்வக்ஞயித்யபி

19. விஸ்வகர்ம ஸுதாஹ்யேதே-பஞ்சஸ்ருஷ்டிப்ரவர்த்தக :
க்ருதேது மாநஸாஸ்ருஷ்படி-ஸ்த்ரேதாயாம்த்ருஷ்ட்டிசாதனம்

20. த்வாபரே மந்த்ர ஸ்ருஷ்டி : கலௌது கரஸாதனம்,
கர்ப்பாதானம் கிஷேகேது-துர்யே பும்சவனக் ரியா

21. மாஸாஷ்ட்டமேஹிவஸீ மந்தோ-ஜாதேவைஜாதகர்மச
நாமகர்மை காதசேக்னி-ஷஷ்ட்டே மாசேம்மபோஜனம்

22. வர்ஷேத்ரி தியேசௌளம்-ஸ்யா-தஷ்ட்டமே சோபநாயனம்,
வேதவ்ரத சதுஷ்க்கம்ச்ச-கோதானம் சோடஸேததா

23. வத்ஸரே ஸ்நா தகம் கர்ம-வைவாஹ : பைத்ருமேதிக :
இதிசோடச கர்மாணி வம்ஸ்யானாம் விச்வகர்மண :

28. பாலாம் மனுதண்டஞ்ச-மயதண்டஞ்சபிப்பல :
த்வாஷ்ட்டு ரௌதும் பரோதண்டோ-நையக்ரோதஸ் சில்பின :

29. காதிரஸ்தக்ஷ தண்டஸ்யா-தண்டானாமிதி நிஸ்ச்சயம்
வசந்தே மனுவம்ஸ்யானாம்-க்ரீஷ்மே மயபுவாம்ததா

30. த்வஷ்ட்ரூணாம் ஸரதி : ப்ரோக்தம், மதாப்ராவிர்த்துசில்பினாம்
சிசிரே தக்ஷகானாஞ்ச-ஹ்யுபநயனாதிகம் விது :

31. மாகபால்க்குண வைசாகே சைத்ரே ஜ்யேஷ்ட்டேச ச்ராவணே
கார்த்திகே மார்க்கசீர்ஷேச உபநயனக் ரமோத்தமம்

32. மனோரஜத ஸூத்ரஞ்ச-மயானாம்பத்ம ஸூத்ரகம்
த்வஷ்ட்டுர்வைதாம்ப்ரஸூ த்ரஞ்ச-சில்பீகார்ப்பாஸஸூத்ரகம்

33. தக்ஷகோ ஹேமஸுத்ரம்ச-ஏவம்ஸூத்ரம் ப்ரகீர்த்திதம்
ஸாமாவேதோ மனூனாஞ்ச மயானாம் யாஜுஷம்ததா.

சுலோகத்தின் தாத்பரியம் : ஸ்ரீ பரமேஸ்வரனை சண்முகன், யாவுந்தெரிந்த தேவதேவனாகிய ஓ மஹாதேவா ! விஸ்வகர்ம வம்ஸத்தார்களுடைய சதாசாரத்தை நான் அறியும்படி சொல்லுமென்று கேட்க ஸ்ரீ தேவதேவனாகிய பரமேஸ்வரன் இங்ஙனம் சொல்வதானார்.

" நீ வினவியது வேதசாஸ்திரங்களினாலே நிர்ணயக்கப்பட்டது. ஸ்ரீ விஸ்வகர்மாவின் பஞ்சமுக தியானத்தினால் ஐந்து பிரம்மகுலம் உண்டாயிற்று. அந்த விஸ்வகர்மாவின் சந்ததிகளாகிய ஐவர்களும்ச சிருஷ்டிப் பிரவர்த்தர்கள். அவர்கள் மனு-மய-த்வஷ்ட்ட-சில்பி-விஸ்வக்ஞ என்னும் நாமத்தை வகித்தவர்கள். அவர்களுக்கு, கிரேதேயுகத்தில் மானஸ சிருஷ்ட்டி, திரேதாயுகத்தில் நேத்திர சிருஷ்ட்டி, துவாபரயுகத்தில் மந்திர சிருஷ்ட்டி, கலியுகத்தில் அஸ்த சிருஷ்ட்டி(கையினால் செய்வது) இவ்விதம் அவர்களது சிருஷ்ட்டிக் கிரமம் விதிக்கப்பட்டுள்ளது.

இன்னும் இவர்களுக்கு நிஷேக காலத்தில் கர்ப்பாதானம், கர்ப்பமடைந்த நான்கா மாதம் பும்சவனம்,

எட்டாவது மாதத்தில் சீமந்தம், சிசு பிறந்தபோதே ஜாதகர்மம், பதினோராவது தினத்தில் நாமகரனம், ஆறாவது மாதத்தில் அன்னப்ராசனம், மூன்றாம் வருடத்தில் சூடாகருமம் அதாவது குடுமி வைத்தல், எட்டாம் வருடத்தில் உபநயனம் அதாவது பூணூல் கல்யாணம், பதினாராவது வருடத்தில் வேத விரதங்கள், நான்கு கோதானகர்மம், ஸ்நாதகம் அதாவது குருகுல வாசத்தில் வேதமோதி முடிந்தபின் ஒரு வருஷம் வெள்ளைலஸ்திரம் சந்தன மலர்மாலை முதலியன அணிந்து தீர்த்த யாத்திரை செய்வது, அப்பால் விவாகம், பிதுரு மேதம்(பிதுர்களைக் குறித்துச் செய்யும் ஓர் யாகம்) இந்த விதமாக விஸ்வகர்ம வம்சத்தார்கள் சோடச கர்மங்களும் வேத விதியாகச் செய்யவேண்டும்.

இனி அவர்களின் தண்டவிதான மாவன :
மனுவுக்கு பலாசத்தண்டம், மயனுக்கு அரசுத்தண்டம், துவஷ்ட்டாவுக்கு அத்தித்தண்டம், சில்பிக்கு ஆலின் தண்டம், விஸ்வக்ஞனுக்கு கருங்காலித்தண்டம், இம்முறையாக மனு முதவானவர்களுக்குச் சொல்லிய தண்டவிதானமாகும்.

இனி உபநயன காலவிதனம் :
வசந்த காலத்தில் மனுவர்களும், கிரீஷ்மருது காலத்தில் மயன்களும், சரத்ருது காலத்தில், துவஷ்ட்டர்களும், வர்ஷா காலத்தில் சிற்பிகளும், சிசிரருது காலத்தில் விஸ்வக்ஞர்களும் உபநயனம் செய்யவேண்டிய காலமாகும்.

மாசி, பங்குணி, சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, கார்த்திகை, மார்கழி மாதங்கள் உபநயனத்திற்கு சாதாரனமாக பொருத்திய மாதங்கள்.

இனி பூணூல் விதானம்:
மனுவுக்கு வெள்ளிப்பூணூல், மயனுக்கு தானரை நூல் பூணூல், துவஷ்ட்டாக்களுக்கு தம்பிரத்தாலாகிய பூணூலாகும். சிற்பிகளுக்கு பருத்தி நூற்பூணூலாகும். விஸ்வக்ஞனுக்கு பொன்னாலாகிய பூணூலுமாகும். இந்த விதமாக இவர்கள் பூணூல் தரித்தல் அவசியம். இன்னும் லிங்க புராணத்தில் பஞ்சகிர்த்திய விவரம்: வேதம்முதலியவைகளிலும் பஞ்சால பிராம்மணோற்பத்தி மார்த்தாண்டம் 51-ம் அத்தியாயம் லிங்கபுராணம் சைவாகமம் 7-ம் அத்தியாயம், 18 முதற் கொண்ட 4 சுலோகங்களிலும்,

18. அயசாம்ச்ச மனு : கர்த்தா-காஷ்ட்டகாரோ மயஸ்ம்ரூதா :
த்வாஷ்ட்ரகம் காம்ஸ் யகர்த்தா-ச-சிலாகர்த்தாச சில்பிக :

19. தைவக்ஞ ஸ்வர்ணகாரஸ்ச்ச-பஞ்சானாம் கர்மபஞ்சகம்
யோவேத பஞ்சகர்மாணி-ஸர்வபாபை : ப்ரமுச்யதே

20. ருக்வேதஸ்ச்ச மனோஸ்யைவ-யஜுர்வேதோ மயஸ்யச
ஸாமவேதெ-த்வஷ்ட்ரகஸ்ய-த்வதர்வாசில்பிகஸ்யச

21. ஸுஷும்ணாபிதவேதோஸௌ-தைவஜ்ஞானாம் ப்ரகீர்த்திதா :
பஞ்சவேதாஸ்ச்ச யோவேத-ஸாயுஜ்யம் லபதேகர :

சுலோகத்தின் தாத்பரியம் : மனுவுக்கு இரும்பு வேலையும், மயனுக்கு மரவேலையும், கன்னானுக்கு செம்பு வேலையும், சில்பிக்கு கல்வேலையும், விஸ்வக்ஞனுக்கு பொன் வேலையும் உரியவையாகும்.

மனுவுக்கு ருக்வேதமும், மயனுக்கு யஜுர்வேதமும், துவஷ்ட்டாவுக்கு சாமவேதமும், சில்பிக்கு அதர்வண வேதெமும், விஸ்வக்ஞனுக்கு பிரணவ(சுழிமுனை)வேதமும் உரியவைகளாம். சுழிமுனையானது பிரணவப் பொருளாகிய பரம்பொருளை நாடி மனம் சிதைவுபடாது ஒன்றிக்கும் வண்ணம் இருவிழிகளையும் சுழிமுனை நாடி என்று சொல்லும் மூக்கு நுனியில் சேர்த்து வைப்பதோரிடமாதலால் சுழிமுனை என்பதை பிரணவமெனச் சிலேடைப் பொருளால் குறிப்பித்துள்ளாரென்க. மேலும் ருக்கு, யஜுர், சாமம், அதர்வணம், பிரணவம் ஆகிய ஐந்து வேதங்களும் முறையே பிரம்மச்சர்யம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம், திகம்பரம் ஆகியவைகளைப் பிரதிபாதிப்பனவாம். பிரணவ வேதம் 32 அத்தியாயங்களையும் 32 மந்திரங்களையும், ஒவ்வொன்றிற்கும் 118 பாஷிய மந்திரங்களையும் கொண்டது. அதன் முடிவான நிலை திகம்பரம். அதோமுக தியானமே திகம்பர நிலைக்கு அடிப்படையென்று உணர்க.

ஆகவே, இந்த ஐந்து வேத முணர்ந்துள்ள விஸ்வபிராமணர்களை தியானிப்பவர்கள் அதாவது விஸ்வாசிப்பவர்கள் சாயுஜ்ய பதவியையடைவார்கள் என்பதாம். ஆகவே மேலே கண்டபிரமாணங்களால் விஸ்வபிராம்மணர்களது வேததிகாரம் விளக்கப்பட்டுள்ளது.